Format (No. 02)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 35

ආයතනයේ නම : ජල සම්පාදන සහ වතු යටිතල පහසුකම් සංවර්ධන අමාත්‍යශය

පාර්ලිමේන්තුවේ ක්‍රම සහ විධි පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තාව

සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 124(6) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ

නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இலக்கம் : 35

நிறுவனத்தின் பெயர்: நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

பாராளுமன்றத்தின் வழிவகைகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை

தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 124(6) இன் கீழ் நிறுவனங்களுக்குப்

பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக

எடுக்கப்படும் நடவடிக்கைகளும்பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No: 35

Name of the institute: Ministry of Water Supply and Estate Infrastructure Development

Submission of observations of the Hon. Minister and

steps taken with regard to the reports tabled by the Committee on Ways and Means in terms of standing Oder No.124(6)

மாதிரி (இல.01)

பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இல-35

அமைச்சின் பெயர்: நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

குழுவினது பரிந்துரை	எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை
மாத்தறை நகரம் மற்றும் அதனை சூழவுள்ள புறநகர் பகுதிகளை வெள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாப்பதற்கான ஒரு முறைசார் ஆய்வினை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படுவதுடன், குடிநீர் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகளை CECB ,தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சசபை, நீர்ப்பாசனத்திணைக்களம்,இலங்கை நில அபிவிருத்தி கூட்டமைப்பு மற்றும் இன்ன பிற நிறுவனங்களினது ஒத்துழைப்புடன் இம்முக்கியமான ஆய்வில் பங்கேற்குமாறும் பரிந்துரைக்கப்படுகின்றது.	பாராளுமன்றின் கௌரவ.சபாநாயகர் அவர்கள் நீர்ப்பாசன அமைச்சினது கௌரவ அமைச்சர் பவித்திரா வன்னியராச்சி அவர்களின் தலைமையில் பாராளுமன்ற ஆலோசனைக்குழு ஒன்றினை நியமித்தார். குழு உறுப்பினர்களும் பங்குதாரர்களும் குறித்த இடத்திற்கு விஜயங்களை மேற்கொண்டதுடன் பாராளுமன்றில் இரு முறை கூடினர். குறித்த கூட்டங்களின்போது நில்வள ஆற்றுப்படுகை மற்றும் மாத்தறை நகர் பகுதிகளில் ஏற்படுகின்ற வெள்ள அபாயம் தொடர்பாக ருகுணு பல்கலைக்கழகம்,மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழங்கள் இணைந்து முறைசார் ஆய்வினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. குறித்த பிரச்சினைகளுக்கு குறுகிய,நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் தீர்வுகளை/ பரிந்துரைகளை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.அவசியமெனின் இவ்வாய்வினில் குறித்த பங்குதாரர்களினது உதவிகளும் பெறப்படும்.
ஏப்ரல் 2024 இற்கு முன்னர், தற்காலிக தீர்வாக நில்வள ஆற்றில் காணப்படுகின்ற மண் அரண்களை அகற்றுமாறும் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளுமாறும் பரிந்துரைக்கப்பட்டது. இந்நடவடிக்கையில் இயந்திரத் தட்டுப்பாடு நிலவுமெனின் இலங்கை நில அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து (SLLDC) வசதிகளை பெற்றுக்கொள்ளுமாறும் பரிந்துரைக்கப்பட்டது.	NWSDB ஆனது ரூபா 38,220,160.00 மில் இதனுடன் VAT இனையும் சேர்த்து M/S SLLDC இற்கு நில்வள ஆற்றிலிருந்து பண்டாத்தர பாலம் வரைக்கும் தற்காலிக மண் அரண்களை அகற்றுவதற்கும் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளுவதற்கும் ஒப்பந்தமொன்றை வழங்கியது.தற்பொழுது மண் அரண்கள் முற்றாக அகற்றப்பட்டுள்ளதுடன் பண்டாத்தர பாலம் நோக்கி குறித்த நடவடிக்கையானது நகர்த்தப்பட்டுள்ளது. வழங்கிய திகதி: 02.02.2024 ஆரம்பித்த திகதி: 13.02.2024 ஒப்பந்தத்தின் பெறுமதி: 38,220,160.00 மில் ு ஏயுவு ஒப்பந்த காலப்பகுதி: 63 நாட்கள் 1ஆம் கால நீடிப்பு : 13 யூலை 2024 வரை

	பௌதீக முன்னேற்றம்: 85% அகற்றப்பட்ட மண்ணின் அளவு: $8000m^3$
மாத்தறை மற்றும் அதன் சுற்றுப்புறங்களுக்கு நீரின் தேவையினை பூர்த்திசெய்வதற்கும் வெள்ள அனர்த்தங்களை தவிர்ப்பதற்கும் டிகிலி ஓயா,பட்டுவிட்டஆர மற்றும் அப்பரேக்கஆர போன்ற நீர்த்தேக்கங்களை அமைப்பது தொடர்பாக முன்மொழிவு மீதான முறைசார் ஆய்வினை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படுள்ளது.	முறைசார் ஆய்வானது நீர்ப்பாசன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. தரவுகள் அவர்களிடமே உள்ளது.
உவர்நீர் தடுப்பணையினால் நில்வள ஆற்றில் ஏற்பட்டுகின்ற வெள்ள அனர்த்ததத்தினை தடுக்குமுகமாக ஒரு அபிவிருத்தித்திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டதுடன் அதனை கீழ்வருகின்ற அரச நிறுவனங்களினது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. • மாவட்ட செயலகம், மாத்தறை • நீர்ப்பாசனத்திணைக்களம் • NWSDB • முத்திய சுற்றாடல் அதிகாரசபை • SLLDC • CECB	பாராளுமன்றின் கௌரவ.சபாநாயகர் அவர்கள் நீர்ப்பாசன அமைச்சினது கௌரவ அமைச்சர் பவித்திரா வன்னியராச்சி அவர்களின் தலைமையில் பாராளுமன்ற ஆலோசனைக்குழு ஒன்றினை நியமித்தார். குழு உறுப்பினர்களும் பங்குதாரர்களும் குறித்த இடத்திற்கு விஜயங்களை மேற்கொண்டதுடன் பாராளுமன்றில் இரு முறை கூடினர். குறித்த கூட்டங்களின்போது நில்வள ஆற்றுப்படுகை மற்றும் மாத்தறை நகர் பகுதிகளில் ஏற்படுகின்ற வெள்ள அபாயம் தொடர்பாக ருகுணு பல்கலைக்கழகம்,மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழங்கள் இணைந்து முறைசார் ஆய்வினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. குறித்த பிரச்சினைகளுக்கு குறுகிய,நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் தீர்வுகளை/ பரிந்துரைகளை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.அவசியமெனின் இவ்வாய்வினில் குறித்த பங்குதாரர்களினது உதவிகளும் பெறப்படும்.

ஜீவன் தொண்டமான் (பா.உ.)
நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்
அபிவிருத்தி அமைச்சர்